**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை – திரு. S.முகமது யூசுப் நவாஸ், B.A.,B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை**

**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ஆம் நாள் சனிக்கிழமை**

**இடைக்கால மனு எண். 3/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 31/2023**

பாண்டியம்மாள் ....மனுதாரர்/வாதி
கருப்பையா ....சிறப்பு அதிகார முகவர்

**/ எதிர் /**

1. ஞானசுந்தரம்
2.ஜெயபால்
3. சார்பதிவாளர், மானாமதுரை
4. மாவட்ட ஆட்சியர், சிவகங்கை ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 23.01.2026 தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சுப்பராயன் அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1.** மனுதாரர் தரப்பில் சிபிசி ஆர்டர் 3 ரூல் 1, 2ன் படி 04.10.2025ம் தேதிய சிறப்பு அதிகார ஆவணத்தின் படி வாதி பாண்டியம்மாள் என்பவரின் பவர் ஏஜெண்டாக தன்னை அங்கீரித்து வா.சா.1 நிருபண வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டு வழக்கை மேல் நடத்த அனுமதி வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுவின் சுருக்கம்:**

தாவா வழக்கின் வாதி தனது மாமியார் என்றும், தனது மாமியாருக்கு வயோதிக நிலையில் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாலும், முடக்கு வாதம் ஏற்பட்டு எழுந்து நடமாட முடியாமலும் நிற்க முடியாமலும் இருந்து வருவதால் தனது மாமியார் நேரில் வந்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க இயலாத சூழ்நிலை இருப்பதால் 04.10.2025ம் தேதி சிறப்பு அதிகார ஆவணம் என்று நோட்டரி பப்ளிக் முன்னிலையில் எழுதி கொடுத்துள்ளார் என்றும், மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் தனது மாமியார் பாண்டியம்மாளுக்கு பதிலாக வா.சா.1 ஆக சாட்சியம் அளித்திட தனக்கு அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்று மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :**

தாவா வழக்கானது 2023ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், வழக்கு தாக்கல் காலத்திலிருந்தே பாண்டியம்மாளுக்கு உடல்நிலை சரியில்லையா என்பதை மனுதாரர் தனது மனுவில் தெளிவுபடுத்தவில்லை என்றும், தாவா வழக்கிடை சொத்து சம்பந்தமாக முந்தைய நீதிமன்ற நடவடிக்கையான OS.No.22/2003 மற்றும் 182/2012 ஆகிய வழக்குகள் சம்பந்தமாகவும், மேல்முறையீடு 5/2019 மற்றும் 2வது மேல்முறையீடு நிலுவையில் இருந்து வருவதையும், சுவாதீன ஒப்படைப்புக்கு EP.No.1/2023 தாக்கல் செய்துள்ள விபரத்தையும் எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ளதாகவும், மேற்படி முந்தைய நடவடிக்கைகளால் தாவா வழக்கானது Res–Judicata என்ற சட்டநிலைப்பாட்டில் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், மனுவில் பாண்டியம்மாள் என்பவருக்கு வியாதிகள் குறித்து எந்தவொரு மருத்துவ சான்றும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எனவே தாவா மனு தள்ளுபடிக்குரியது என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4 இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை : இம்மனு அனுமதிக்கத்தக்கதா / இல்லையா என்பதேயாகும் :–**

மனுதாரார் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தகுந்த நிலையில் உள்ளது. இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 118ன் படி கேள்விகளை புரிந்து கொண்டு பதில் அளிக்க தெரியாத நபர்கள் தவிர அனைவரும் சாட்சியம் அளிக்க தகுதியானவர்கள் ஆகும்.

அதன்படி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 120ன் படி உரிமையியல் வழக்கு நடவடிக்கைகள் அனைத்திலும் வழக்கிற்குரிய தரப்பினர்கள் அல்லது அத்தரப்பினரின் கணவன், மனைவி தகுதி வாய்ந்த சாட்சிகள் ஆகும்.

இவ்வழக்கில் மனுதாரர் சாட்சியம் அளிக்க தரப்பினராக இல்லாவிட்டாலும், மனுதாரரின் மாமியாரான வாதி பாண்டியம்மாளுக்கு பதிலாக சாட்சியம் அளித்தாலும், இவ்வழக்கில் தரப்பினருக்குரிய சாட்சிய தரத்தில் சாட்சியம் அளிக்க வருகிறாரா அல்லது மூன்றாம் தரப்பினராக சாட்சியம் அளிக்க வருகிறாரா போன்ற விசயங்கள் வழக்கு விசாரணையின் இறுதியில் தான் முடிவு செய்ய இயலும். எனவே நீதியின் நலன் கருதி இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

> "Audi alteram partem is a Latin phrase meaning 'listen to the other side', or "let the other side be heard as well". It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them."

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் தாவா மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 பிப்ரவரி மாதம் 7ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.02.07 17:25:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**மனுதாரர்  தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் –** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் –** இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.02.07 17:25:47 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**DISTRICT MUNSIF COURT**
**MANAMADURAI**

## ORDER

**I.A.No.3/2025**
**in**
**OS. No. 31/2023**

**Dated: 07.02.2026**